பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

26 02 2025 **WEDNESDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தவறான தகவல்களை பரப்புவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

2. தமிழகத்தில் உள்ள ரயில் பாதைகள் அனைத்தும் அடுத்த ஆண்டு இறுதிக்குள் மின்மயமாக்கப்படும் என்று ரயில்வே இணையமைச்சர் திரு சோமண்ணா தெரிவித்துள்ளார்.

3. கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ஐந்தாயிரம் கோடி ரூபாய் முதலீட்டுத் திட்டங்களுக்கான ஒப்பந்தம் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இன்று சென்னையில் கையெழுத்தானது.

4. தமிழகத்தில் வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த நான்காண்டுகளில் விவசாயிகளுக்கு 5 ஆயிரத்து 554 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

5. இலங்கை சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Deepshikha Singh** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<<>>>>**

மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு காரணமாக தமிழகத்தில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை குறையும் என்று உண்மைக்கு மாறான தகவலை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் பரப்பி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று கோவையில் பிஜேபி-யின் புதிய அலுவலகத்தை திறந்துவைத்து அவர் பேசினார்.

மக்கள் தொகை அடிப்படையிலும், விகிதாச்சார அடிப்படையிலும்தான் தொகுதி மறுசீரமைப்பு செய்யப்படும் என்று பிரதமர் நாடாளுமன்றத்தில் உறுதி அளித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக தென் மாநிலங்களில் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும், எந்தவிதத்திலும் பாதிப்பு ஏற்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

திமுக ஆட்சியில் ஊழல் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக அவர் குறை கூறினார்.

இதிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காகத்தான் பல்வேறு பொய்யான தகவல்களை திமுக பரப்பி வருவதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன், தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை பிஜேபி நிறைவேற்றி வருவதாக கூறினார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் - 60 செகண்ட்ஸ்)*

பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை இந்த நிகழ்ச்சியில் பேசுகையில், மத்திய அரசின் திட்டங்களை தடுக்கும் வகையில் திமுக அரசு செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.

பிரதமரின் மக்கள் மருந்தக திட்டத்தை பெயர் மாற்றி, முதல்வர் மருந்தகம் என்று திமுக அரசு கொண்டு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப படிப்புகளை தமிழில் கற்பிக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கியவர் திரு அமித் ஷா என்று அவர் கூறினார்.

இதேபோல், மத்திய ரிசர்வ் காவல்படை தேர்வுகளை தமிழ் உட்பட 13 மொழிகளில் எழுதும் வகையில அறிவிப்பை வெளியிட்டவர் திரு அமித் ஷா என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபோன்று, தமிழுக்கு மரியாதை செய்பவர்கள், எவ்வாறு இந்தியை திணிப்பார்கள் என்றும் திரு அண்ணாமலை வினவினார்.

**<<<<<<<>>>>**

தொகுதி மறுசீரமைப்புத் தொடர்பாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் பரப்பிய பொய்யுரைகளுக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா முற்றுப்புள்ளி வைத்துள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு கேசவன், இதுதொடர்பாக, அழைப்பு விடுக்கப்பட்ட அனைத்துக்கட்சி கூட்டத்தை நடத்த வேண்டுமா என்பதை முதலமைச்சர் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தொகுதி மறுசீரமைப்புத் தொடர்பாக, தமிழக மக்களிடம் முதலமைச்சர் வெளியிட்ட கருத்து தவறானது என்பது தற்போது வெளிப்பட்டுள்ளதாகவும் திரு கேசவன் கூறினார்.

<<<<<<>>>>

தமிழகத்தில் உள்ள ரயில் பாதைகள் அனைத்தும் அடுத்த ஆண்டு இறுதிக்குள் மின் மயமாக்கப்படும் என்று ரயில்வேத்துறை இணையமைச்சர் திரு சோமண்ணா கூறியுள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாம்பன் ரயில் பாலப்பணிகள் நிறைவடைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

இது விரைவில் பயன்பாட்டிற்காக திறக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மத்தியில் பிஜேபி தலைமையலான அரசு பொறுப்பேற்ற பின்னர் தமிழகத்தில் ஏராளமான ரயில்வேத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் திரு சோமண்ணா தெரிவித்தார்.

<<<<<<>>>>

கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ஐந்தாயிரம் கோடி ரூபாய் முதலீட்டுத் திட்டங்களுக்கான ஒப்பந்தம் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இன்று சென்னையில் கையெழுத்தானது.

தோல் அல்லாத காலணி உற்பத்தித் திட்டங்களை செயல்படுத்துவதற்கு இந்த ஒப்பந்தம் வகை செய்துள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம், 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>

தேர்தல் நடைமுறைகள் தொடர்பாக மதுரை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் விரிவான ஆய்வு மேற்கொண்டுள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார் கூறியுள்ளார்.

இன்று இவ்விரு மாவட்டங்களிலும் ஆய்வு மேற்கொண்ட பின்னர் ராமநாதபுரத்தில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

வாக்காளர்களின் நலனை மட்டுமே கருத்தில்கொண்டு தேர்தல் ஆணையம் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள் குறித்து தலைமை தேர்தல் அதிகாரிகள் பங்கேற்கவுள்ள மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த மாநாடு அடுத்த மாதம் 4 மற்றும் 5-ஆம் தேதிகளில் புதுதில்லியில் நடைபெறவுள்ளதாகவும் திரு கியானேஷ்குமார் தெரிவித்தார்.

<<<<<<>>>>

தமிழகத்தில் வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த நான்காண்டுகளில் விவசாயிகளுக்கு 5 ஆயிரத்து 554 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக வேளாண்துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இன்று சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக அரசின் வேளாண் நிதிநிலை அறிக்கையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து விவசாயிகளிடம் கருத்து கோரப்பட்டு வருவதாக கூறினார்.

இந்த கருத்துக்கேட்பு கூட்டங்களுக்கு விவசாயிகள் பாராட்டு தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>

மகா சிவராத்திரி இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, சிவாலயங்களில் நான்கு கால பூஜைகள் நடைபெறுகின்றன.

<<<<<<>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் ‘செய்திச்சுடர்’ நிகழ்ச்சியில், ‘பெண் குழந்தைகளை காப்போம் - அவர்களுக்கு கல்வி கற்பிப்போம்’ குறித்து மூத்த பத்திரிகையாளர் திரு. வெங்கடேஷுடன் எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணலின் இரண்டாவது பகுதி இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>

தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் நாளை கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இன்று பிற்பகல் முதல், நெல்லையில் பரவலாக மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தை மாநில அமைச்சர் திரு நாசர் இன்று திறந்துவைத்தார்.

--------- தனசேகரன்

விழுப்புரம் மாவட்டம் தழுதாளி கிராமத்தில் 32 கோடி ரூபாய் செலவில் இருவழிச்சாலையை, நான்குவழிச் சாலையாக அகலப்படுத்தும் பணிகளை மாநில அமைச்சர் திரு பொன்முடி இன்று தொடங்கிவைத்தார்.

------------------

கரூர் மாவட்டம் குளித்தலையில் நேரிட்ட சாலை விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

-----------------

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக மேற்கொள்ளப்பட்ட வாகன சோதனையில் பதிவெண் பொருத்தப்படாத 284 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை கண்காணிப்பாளர் திரு ஆல்பர்ட் ஜான் கூறியுள்ளார்.

---------------

வேலூர் அருகே மலைப்பகுதியில் உள்ள காடுகளில் தீ வைத்த இரண்டு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் போதைப்பொருள் தொடர்பான வழக்கில், நைஜீரியா நாட்டை சேர்ந்த ஒருவர் உட்பட மூன்று பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இலங்கை சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Deepshikha Singh** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 15-21, 21-14, 21-16 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Devika Sihag**-ஐ வென்றார்.

----------------

பெங்களூரு ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரன் சிங் - **Adil Kalyanpur** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 1-6, 6-2, 10-4 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Nitin Kumar Shinha – Manish Suresh Kumar** இணையை வென்றது.

<<<<< >>>>